

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

இன்று பிலவ ஆண்டு ஐப்பசி மாதம் 30ஆம் நாள்

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் நாள் செவ்வாய் கிழமை

**குறள் 5**

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

**விளக்கம்**

கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம் அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை.

**பழமொழி ( Proverb )**

A little learning is a dangerous thing.

அரை குறை படிப்பு ஆபத்தானது

**பொன்மொழி**

செய்ய முடிந்தவன் சாதிக்கிறான், செய்ய முடியாதவன் போதிக்கிறான்

**இரண்டொழுக்க உறுதி மொழி**

1. நான் தினமும் நல்ல பழக்கவழக்கங்களை மட்டுமே கடைபிடிப்பேன்
2. என்னுடைய நாட்டையும், சட்டத்தையும் மதித்து நடப்பேன்.

**இன்றைய பொது அறிவு வினா விடை**

தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வி அமைச்சர் -

திருமிகு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி

தமிழ்நாட்டின் உயர்கல்வித் துறை அமைச்சர் —

திருமிகு. க.பொன்முடி அவர்கள்

**இன்றைய தினம்**

சர்வதேச சகிப்புதன்மை தினம்



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

### இன்றைய செய்திகள்

- இம்மாதம் 17 மற்றும் 18-ல் சென்னைக்கு கன மழை எச்சரிக்கை ; வானிலை மையம் அறிவிப்பு.
- ஆன்லைனில் தான் தேர்வு நடத்த வேண்டும் எனக் கூறி மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தியதால் செமஸ்டர் தேர்வு தள்ளி வைக்கப்பட்டதாக கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.
- கன்னியாகுமரி உள்ளிட்ட 4 மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
- நவம்பர் 18-ம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலம் தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளை அடையக்கூடும். அரபிக் கடலில் அடுத்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாவதல் கனமழை அடுத்த வாரமும் தொடரும் வாய்ப்புள்ளது.
- தமிழ்நாட்டில் மகக்ள் ஆர்வமுடன் தடுப்பூசியை செலுத்துவதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்படுத்திய விழிப்புணர்வே காரணம் என மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் புகழாரம் சூட்டியுள்ளார்.
- தமிழக அரசின் வலிமை சிமெண்டை இன்று முதலமைச்சர் முக ஸ்டாலின் அறிமுகம் செய்து வைக்கிறார். இதன் மூலம் வெளிசந்தையில் சிமெண்ட் விலை குறைய வாய்ப்பிருப்பதாக நம்பபப்படுகிறது.
- டெல்லியில் காற்று மாசுவினை கட்டுப்படுத்த, தேவைப்பட்டால் 2 நாட்கள் ஊரடங்கு பிறப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர்.
- தமிழகத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளின் சுகாதாரத் திட்டங்களுக்காக 805.92 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.